 [சென்ற மாதம் வெளியான இச்சித்திரக் கதையில் 3ஆம் பக்கம் விடுபட்டுவிட்டது. எனவே இந்த மீள்பதிவு.]

# நிதானத்தில் தானம்

கதை: இ.ஜே.சுந்தர்
ஓவியம்: ஷேக்




அப்போது அங்கு கபிலர் வருகிறார்.
கபிலர்:(தமக்குள்) பிழையான பண்கள்! முறையாக இசை பயிலாப் பாணன் போலும்.
பானைமலையன்: ஆகா! அருமை! என்ன வேண்டும் உனக்கு?
பாணன்: உங்கள் விருப்பப்படி எதுவும்.
பானைமலையன்: இந்தா என் தங்க மாலையைப் பரிசாகப் பெற்றுக்கொள்.
4
கபிலர்: (தமக்குள்) கொடுமை! தாறுமாறாக இசைத்தவனுக்குத் தங்க மாலையா? போதையில் செவியும் சீரழிந்ததோ?
பானைமலையன்: அட! கபிலரா? வாருங்கள்! பாடுங்கள்! உங்களுக்கும் பொற்காசுகள் வழங்குகிறேன்.
பாணன்: அவர் நிதானத்தில் இருந்தால் இந்தத் தானம் கிடைக்காது. கெடுத்துவிடாதீர்.
கபிலர்: ஐயனே! நீங்கள் நிதானத்தில் இருக்கும்போது பாடுகிறேன்.
கபிலர்: இப்படியும் ஒரு பிழைப்பா? ஏமாற்றாமல் ஒழுங்காக யாழ் மீட்டக் கற்றுக்கொள். இல்லையேல் இருப்பதையும் இழப்பாய்.
5


சோழன் பெருநற்கிள்ளியின் உறந்தைஅரண்மனையில் மலையமான் திருமுடிக்காரி
காரி: நண்பனுக்குச் செய்யும் உதவி இது. கைம்மாறு எதற்கு?
சோழன்: தாங்கள் பெரும்படையோடு வந்து துணை நின்றீர்! படையெடுத்து வந்த சேரன் இரும்பொறையை வெற்றி கொண்டேன். உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?
சோழன்: நீங்கள் மறுத்தாலும் நீங்கள் கோவலூர்அடையும் முன் என் பரிசு உங்களை அடையும்.
6


காரியின் கோவலூர் அரண்மனை வாசலில் சோழன் வழங்கிய தேர்கள் அணிவகுத்து நிற்கின்றன.
காரி: அமைச்சரே! வாசலில் வந்து காத்திருக்கும் இரவலர்கள், தகுதியாளவர்கள் அனைவருக்கும் இந்தத் தேர்களை என் தேர்களோடு வழங்குங்கள்..
கபிலர்: என்ன சொல்கிறீர்! நீங்கள் கள்ளுண்டு மயங்கிப் பேசவில்லையே!
7


காரி: புலவரே! நான் நிதானத்தில் இருக்கும் போதுதான் தானம் செய்வேன். இல்லாதவர்க்கு இருப்பவன் செய்ய வேண்டிய நியாயமான கடமையையே செய்கிறேன்.
!
கபிலர்: இத்தனையும் அழகிய தேர்கள்! உங்கள் முள்ளூர் மலையில் வீழும் மழைத்துளிகளைவிட மிகுதியானவை. இத்தனையுமா??
8
புலவர் நப்பசலையார்: இத்தகையவரே வள்ளல் காரி! புலவர்களின் சிறந்தவர் நீர். வள்ளல்களில் உயர்ந்த காரியின் இச்செயலை நீர் பாடினால் அவர் ஈகையை மற்றவர்களும் பின்பற்றுவார்களே.
9
கபிலர்:(வியந்து பாடுகிறார்)
நாட் கள் உண்டு, நாள்மகிழ்மகிழின்,
யார்க்கும்எளிதே, தேர் ஈதல்லே;
தொலையாநல்லிசை விளங்கு மலயன்
மகிழாதுஈத்தஇழையணிநெடுந்தேர்
பயன்கிழுமுள்ளூர்மீமிசைப்
பட்ட மாரி உறையினும்பலவே.(புறம்: 123)
10